[எட்டாவது பாராளுமன்றம் (நான்காவது கூட்டத்தொடர் ) - முதலாவது கூட்டம்]

**இல. 1.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 சனவரி 03 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களால் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கேதுவாக இத்தின நிகழ்ச்சிகள் மு.ப. 10.00 மணிக்கு உறுப்பினர்கள் சபாமண்டபத்தில் கூடுவதுடன் ஆரம்பமாகும்.

இன்றைய தினம் சபை அலுவல் ஒழுங்கு பின்வருமாறு :-

1.

**பாராளுமன்ற அமர்வு நிறுத்தம் மற்றும் பாராளுமன்றத்தைக் கூட்டுதல் பற்றிய மேன்மைதங்கிய சனாதிபதியினது பிரகடனத்தைப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தல்.**

2.

**மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் உரை.**

3.

**தற்காலிக சபை இடைநிறுத்தம்.**

4.

**சபை மீண்டும் தொடர்தல் (பி.ப. 1.00 மணிக்கு).**

---

**பாராளுமன்றம் பி.ப. 1.00 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர்……**

### 2020 சனவரி 03 வெள்ளிக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— இலங்கையில் இன மற்றும் சமய சகவாழ்வை உறுதி செய்வதற்காக அது பற்றி ஆராய்ந்து தமது சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு,— 2018 செப்டெம்பர் 07 ஆம் திகதி சபாநாயகரால் நியமிக்கப்பட்ட இலங்கையில் இன மற்றும் சமய சகவாழ்வை உறுதி செய்வதற்காக அது பற்றி ஆராய்ந்து தமது சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு, தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 2018 செப்டெம்பர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் இடைக்கால அறிக்கையின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதி அறிக்கையை முன்வைப்பதற்கு குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2020 ஜூலை 12 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்படுமாக.

---